International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

சூல் நாவல் வழி அறியலாகும் நீர் மேலாண்மை

முனைவர் பூ. கவிதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி
சின்னக்கலையம்புத்தூர், பழனி

ஆய்வுச் சுருக்கம்

மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாதது நீர் என்பதும், அதனைப் பாதுகாக்கும் முறை பற்றிய செய்திகளும், உழவுக்காக மட்டுமல்லாமல் பிற உயிர்களுக்கும் (மனிதர்கள் தவிர) தேவையான ஒன்றாக நீர் இருப்பது குறித்த செய்திகளையும், அந்நீரைப் பாதுகாக்கும் இடங்களைக் கடவுளாக வழிபட்ட மேன்மை குறித்தும் நீரைப் பங்கிட்டுக்கொடுப்பவர்களுக்கு அளிக்கப்படும் சிறப்புக்குறித்தும், சூல் நாவல் எடுத்துரைத்துள்ள திறம் பற்றிய செய்திகளே இக்கட்டுரையின் உள்ளீடு பொருளாகும்.

முதன்மைச் சொற்கள்

கண்மாய் - நீர்நிலை - நீர்நிலை-தெய்வ நம்பிக்கை - மேலாண்மை - மீன் பிடிப்பு.

ஆய்வுச்சிக்கல்

நீர் மேலாண்மை வழிமுறைகள், வேளாண்நெறிமுறைகள், சூழலியல், பதிவுகள், அறிவியல் சிந்தனைகளை ஆய்ந்தறிதல்.

நோக்கம்

வேளாண் மக்களின் நீர் மேலாண்மை வாழ்வியலை அறிதல், நீர்நிலைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை இக்கால மக்களுக்கு வலியுறுத்து;தல், மண் சார்ந்தே மனித வாழ்வு நகர்கிறது என்பதைப் புலப்படுத்துதல்.

ஆய்வு அணுகுமுறை

சூழலியல், அறிவியல் மற்றும் பகுப்பாய்வு அணுகுமுறை.

முன்னுரை

உலகு செழிக்கவும் உயிர்கள் வளமுடன் வாழவும் இன்றியமையாதது நீர். தெய்வப் புலவன் வள்ளுவனே 'நீரின்றி அமையாது உலகு" எனக் கூறுவது போல உலக உயிர்கள் அனைத்திற்கும் ஆதாரமாவது நீர்தான். மனிதர்கள் மட்டுமின்றி விலங்குகள், தாவரங்கள், பறவைகள், நீர் வாழ்வன என அனைத்தும் உயிர் வாழ்வதற்குக் காரணமாவது நீர்நிலை தான். கிணறுகள், ஆறுகள், குளங்கள், ஏரிகள், அணைகள், கால்வாய்கள் போன்றவை நீர் பாய்ச்சுதலுக்கு தேவையான ஆதாரமூலங்கள் எனலாம். விருதுநகர் மாவட்டம் உருளைக்குடி கிராம மக்களின் வாழ்வாதாரம் பற்றியும், அம்மண்ணுக்கு நீர்வரத்து கிடைக்கும் வழிமுறைகள் பற்றிய செய்திகளும், சூல் நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பருத்தி, வாழை, கரும்பு, வெற்றிலை போன்றவை பயிரிட ஏற்ற மண்ணாக கரிசல் பூமி

விளங்குகிறது.

நீரின்மகத்துவம் பற்றியும் அதன் சிறப்பம்சம் பற்றிய செய்திகளையும் அதனை எவ்வாறு பாதுகாத்தல் பயன்படுத்தல் என்பனவற்றின் புரிதலை நோக்கி வாசகரை நகர்த்திச் செல்லும் விதமாக இந்நாவல் அமைந்து உள்ளது. கிராமத்தின் விவசாயத்திற்கு ஆணிவேராக இருக்கும் நீர்நிலைகள் குறித்த இலக்கியப் பதிவினைக் கண்டறியும் முயற்சியாக கட்டுரை அமைகிறது.

பெயர் விளக்கம் - 'கண்மாய்'

கண்மாய் என்பது விவசாயப் பயன்பாட்டிற் காக மழைநீரை சேமித்து வைக்கப்படும் நீர் நிலையாகும். தென்மாவட்டங்களில் மட்டுமே 'கண்மாய்" என்ற சொல் பெரும்பாலும் வழக்கில் உள்ளது. இம்மாவட்டங்களில் பெரும்பாலும் ஆறுகள் இன்மையால் மக்களின் நீர் பயன்பாட்டிற்காக மன்னர்களால் வெட்டப்பட்டவையே கண்மாய்கள் எனலாம் ஐரேப்பியர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் அதிகமான எண்ணிக்கையில் நீர் நிலைகள்; வெட்டப்பட்டன என்ற செய்தியை, சூல் நாவல் உருவான கதை என்ற பகுதியில் ஆசிரியர் (சோ.தர்மன்) நமக்கு சுதந்திரம் கிடைத்த போது வெள்ளைக்காரன் சுதந்திரத்தை மட்டுமே கொடுக்கவில்லை கிட்டத்தட்ட 36,000 கண்மாய்கள், ஊரணிகள் குளங்கள், ஆறுகள் போன்ற நீர்நிலைகளையும் ஒப்படைத்தான் என்று கூறுவதிலிருறந்து அறியமுடிகிறது.

இலக்கியங்களில் நீர்நிலை குறித்த செய்திகள்

சங்க கால மக்கள் பருவநிலை பற்றி நன்கு அறிந்திருந்தனர். மழைநீரை சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர்நிலைகளை அமைத்தி ருந்தனர். நீரைச்சேமித்து தகுந்த முறையில் மக்கள் பயன்பாட்டிற்கும் நாடு செழிக்க வைக்கும் விவசாயப் பயன்பாட்டிற்கும் அளிப்பதை, மன்னர்கள் தங்கள் தலையாயக் கடமை என்று உணர்ந்திருந்தனர். இதனை,

நிலன்தெறி மருங்கின் நீர்நிலை பெருக்கத்
தட்டோரம்ம இவண் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே[1]

என்ற புறநானூற்றுப் பாடல் வழி அறிய முடிகிறது. மேலும்,

காவொடு அறக்குளம் வெட்டல் மிக இனிதே[2]

என்ற இனியவைநாற்பதின் பாடலடி குளம் வெட்டுதல் என்பது மிகப் பெரிய அறச்செயல் என்பதைச்சுட்டுகிறது.

அதிகப்படியான மழை நீரை தம்முள் அடக்கி கொள்ளக்கூடிய பெரிய நீர்நிலைகள் இருப்பது ஒரு நாட்டிற்குச் சிறப்பைத்தரும் என்பதை,

யாறுள் அடங்குங் குளமுள வீறுசால்[3]

என்னும் நான்மணிக்கடிகை பாடல் உணர்த்துகிறது.

கண்மாய்களையும், குளங்களையும் காத்து முறையாக பராமரித்த செய்தியினை,

பெருங்குளக் காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில் மறந்தனவே[4]

என அகநானூற்றுப் பாடலடிகள், சிறு குழந்தையை தாய் எவ்வாறு கண்ணினை இமைகாப்பது போலக்காப்பாளோ அதுபோல, நீர் நிலைகளையும் காவல் புரிய வேண்டும் என்றும், அப்போதுதான் நாடும் வீடும் சிறக்கும் என்ற செய்தியும் புலனாகிறது.

நீர்நிலை அமைப்பு முறை

வேளாண்மை சிறப்புறக் காரணம் நீர்நிலைகளும் நீராதாராங்களுமே என்பதை அறிந்து, நீரினைப்பாதுகாக்கும் முறையினை யும் உணர்ந்து செயல்பட்டுள்ளனர் நம் முன்னோர்கள். இதனை,

எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
தெண்நீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ[5]

என்னும் புறநானூற்றுப்பாடல் வரிகள் மூலம் நீர்நிலை திங்கள் போன்ற வடிவில் அமைத்தால் அதிக நீரை தேக்கி வைக்க முடியும் என்ற அறிவியல் உண்மையினையும் அறிந்திருந்தனர் என்பதை உணர முடிகிறது.

கண்மாய் பராமரிப்பு

ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலங்களில் பெய்யும் மழை நீரை சேமிப்பதற்குக்கோடை காலத்தில் கண்மாய் தூர்வாரப்படும். கண்மாய் தூர்வாருதல்; (மராமத்து) என்பது ஊர் மக்கள் அனைவரும் கூடி கண்மாய் பகுதியில் பல வகையிலும் அடித்து வரப் பட்டு, அதிக அளவில் தேங்கியுள்ள மண்ணை நீக்குதல் ஆகும். அம்மண்ணில் இயற்கை வளங்களும் பல வகைத் தாதுக் களும் இருப்பதனால் அம்மண் தூர்வாரி எடுத்துச் செல்லப்பட்டு விளைநிலங்களில் பயன்படுத்தப்படும். இப்பணியை ஊரார் அனைவரும் தமது சொந்தப்பணியாகவும் கடமையாகும் கருதினர்.

கண்மாய் பராமரிப்பு மன்னர் ஆட்சி காலத்தில் எவ்வாறு இருந்தது, ஜமீன்தாரர் ஆட்சி காலத்தில் எவ்வாறு இருந்தது, வெள்ளையர்கள் ஆட்சியில் எப்படி இருந்தது, தற்போதைய நிலை என்ன என்பன போன்ற அனைத்துச் செய்திகளையும் உள்ளடக்கிய

தாக சூழ் நாவல் அமைந்துள்ளது. வெள்ளை யர்கள் காலத்திலேயே கண்மாய் நீரைத் தகுந்த பாதுகாப்போடு அனைவருக்கும் பங்கிட்டு (அனைத்து நிலங்களுக்கும் பகிர்ந்து அளித்தல்) பயனடையச் செய்வதற்கென்று ஒரு தனி நபரை (நீர் பாய்ச்சி) நியமித்திருந் தனர். அவ்வாறு நியமனம் செய்தவர் சொந்த விருப்பு வெறுப்பின்றி கண்மாயை நேசிப்ப ராகவும் தன் உயிரினும் மேலாக நீர் நிலையை பாதுகாப்பவராகவும் இருந்து உள்ளனர். பல இன மக்களும் வாழக்கூடிய ஊரில் பரம்பரையாக நீரைப்பங்கிட்டு அளிக்கும் உரிமை நீர்ப்பாய்ச்சிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நீர்ப்பாய்ச்சி மடைக்குடும்பன், மதகடக்கி, மடையன் (மடையை ஆள்பவன்) எனப்பல பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளான்.

கண்மாய் பெருகிவிட்டால் அதைப் பாதுகாப்பது மட்டுமல்ல அவன் வேலை அத்தனை தண்ணீரையும் தானியங்களாக மாற்றி சம்சாரிகள் கையில் கொடுக்க வேண்டிய பொறுப்பும் அவனுடையதே[6]

மழைக்காலம் வருமுன்பே கண்மாய் தூர் வாரும் போது அய்யனார் சாமியை வணங்கி விட்டு முதன் முதலில் பரம்பரை எட்டயபுரம் அரண்மனை மண்வெட்டி நீர்ப்பாய்ச்சியிடம் கொடுக்கப்படும். அதனை வாங்கி மூன்று முறை தரையில் வெட்டிய பிறகே மற்ற அனைவரும் தூர்வாரும் பணியைத் தொடங் குவர். அதேபோல முதல் நடவு தொடங்கும் முன்பும் அய்யனாருக்குப் பொங்கலிட்ட பின்னரே தொடங்குதல் வழக்கத்தில் இருந்துள்ளது.

நீர் பாய்ச்சியின் பண்பு குறித்து கூறுகையில்,

'டேய் மடைக்குடும்பா, ஒரு சொட்டுத் தண்ணீரையும் சரிசமமாகப்பங்கு வைக்கும் உன் மடைக் குடும்பவம்சம் எனக்கு தெரியும். தண்ணீரைப்பங்கு வைப்பதில் ஓரவஞ்சன செய்பவனின் வம்சம் தழைக்காது. தண்ணீரை வைத்துக் கொண்டு இல்லையென்று வம்பு பண்ணுகிறவன் வம்சத்தை தண்ணீரே அழிக்கும் உன் வம்சத்தின் நீதி, நேர்மை கண்மாயைக் காக்கும் கடமை, கர்வமற்ற பணிவு எல்லாவற்றையும் நானறிவேன்"7 என்ற நாவலாசிரியர் கூற்றியிருந்து,

நீர்வரத்து குறைந்து கண்மாயில் அடைப்பு ஏற்பட்டால் அதனை தனது உயிர் கொடுத்தாவது கண்மாய் மடையைத்திறந்து விட முயற்சி செய்துள்ளமை இந்நாவல்; மூலம் அறிய முடிகிறது. மனசாட்சியும் மனிதாபிமானமும் உள்ள மனிதர்களாகவும் நீரில் இறங்கி மூச்சடக்கி நீரினைத்திறந்து விடும் திறமை மிக்கவர்கள் வாழ்ந்தமை குறித்த செய்தியையும் அறியலாகிறது.

வடக்கத்தி அம்மன் வழிபாடு

மழை பெறவேண்டி வழிபாடு செய்வதும் உண்டு. ஒரு ஆண்டிற்கு விவசாயம் செய்யப் போதுமான அளவு கண்மாயில் நீர் பெருகி விட்டால் மழையை நிறுத்த வேண்டி சடங்கு செய்தனர். மழை அதிகமானால் உயிர்களும் பயிர்களும் சேதமடையும் என்பதால் இச் சடங்கு செய்யப்பட்டது. அதாவது பச்சரிசியி னால் செய்த தூள் மாவை ஒரு பெண் கையால் அள்ளி வாயில் போடுவது போலப் பொய்யாகப் போட்டுக்காட்டி, தின்பது போல நடித்தலும், கை நிறைய மாவை அள்ளுவது போல் அள்ளி நீர்ப்பாய்ச்சி துண்டினை ஏந்தி நின்று மாவைக்கேட்க, துண்டில் மாவைப் போடுவது போல வெறுங்கையை மூடிக் கொண்டு நடிப்பதுமாக இருப்பர் நீர்ப்பாய்ச்சி.

சாமி இனிமே வேண்டவே வேண்டாம் சாமி போதும் சாமி"

'ஐயய்யோ சாமி! போதும் போதும் வேண்டாம் சாமி[8]

என்று கூறுவதோடு கூட்டத்தில் உள்ளவர் களும் போதும் போதும் வேண்டாம், வேண்டாம் என்று கூறுவார்கள் மறந்துங் கூட யாரும் வேண்டும் என்று சொல்லி விடாமல் பார்த்துக் கொண்டனர் இக்காலத்தில் இப்படி ஒரு சடங்கு முறையும் இல்லாமல் போயிற்று.

மழை பற்றிய நம்பிக்கை

பறவைகள் மரங்களின் உச்சியில் கூடு கட்டி இருந்தால் அந்த ஆண்டு கண்மாயில் உள்ள மரங்கள் மூழ்கும் அளவுக்கு மழை பொழியும் என்றும் மரக்கிளை (தாடிக்கொப்பு) பாதியில் அதிகளவு கூடுகட்டி இருந்தால் அரையளவு அல்லது முக்கால் அளவு மழை பெய்யும், என்பதைப் பறவைக் கூட்டிலிருந்து கணித்தார்கள். மேலும் தூக்கணாங்குருவிக் கூட்டில் அடிப்பக்கம் ஒரு வாயில் இருக்கும். பக்கவாட்டில் ஒருவாயில் இருக்கும் அப்பக்க வாட்டுப் பகுதி தெற்குப்பக்கம் பார்த்தபடி பெரும்பான்மையாக இருந்தால் அந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை அதிகமாக இருக்கும். வடக்குப் பக்கம் பார்த்தபடி அதிகமாக இருந்தால் தெற்கத்தி மழை அதிகம் என்பதையும் எந்த அறிவியல் நுட்பமும் படிக்காத, நம்பிக்கையையும் அனுபவத்தையும் வைத்து கணித்த கணிப்பும் முற்றிலும் சரியாகவே இருந்தது.

ஆடுகள் புல் மேயாது கூட்டங்கூட்டமாக சேர்ந்து நிற்றல், தூண்டில் போட்டால் மீன் விழாதிருத்தல், தைலான் குருவி தரையோட

தாழப்பறந்து திரிதல், இரவில் நிலா வாராதிருத்தல், எரும்பு முட்டைகளைத் தூக்கிக் கொண்டு சாரை சாரையாக மேடு தேடிப் போதல், இரவில் கூகைக் கூப்பாடு போடுதல், காற்றடிக்காது வேக்காட்டம் கூடுதல் இவையெல்லாம் மழைக்கான அறிகுறிகளாக நம்பினர்.

மீன்பிடிப்பு முறைகள்

கண்மாயில் நீர் குறையத் தொடங்கிய பின்பு மீன் பிடிப்பதற்கு என்று ஊர் சாட்டப்படும். அதன் பிறகு அவரவர் விருப்பம் போல் தூண்டிலிட்டு மீன்பிடிப்பர். சுற்றுக்கிராமங்களுக்கும் தகவல் தெரிவித்து விடுவர். உருளைக்குடி கிராமமே திருவிழாக்கூட்டம் போல் காட்சி அளிக்கும். மனிதர்கள் மட்டுமன்றி கொக்குக் கூட்டங்கள், நாரைகள், உள்ளான், சிறகு, முக்குளிப்பான், பாம்புத் தலையான், நாமக்கோழி, மீன்கொத்தி, போன்ற பறவை இனங்களும் பொடுதலை, ஆகாயத்தாமரை, நீர்க்குரண்டி குறுக்கு முத்துச்செடிகள் என நீர்ச்செடிகளும் நிறைந்து காணப்படும். ஊர் சாற்றுமுன் யாரும் மீன்பிடிப்பதில்லை.

கண்மாயில் விதவிதமான நாட்டு மீன்கள்; அழிந்து வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட 'ஜிலேபிகெண்டை' என்கிற மீன் மற்ற வகை மீன்களை இல்லாமல் செய்துவிட்டது.

ஏரிக்கரை உடையாமலும் கண்மாய் அழியாமலும் இருக்க சங்கஞ் செடிகளும், பால்கொடிகளும், திறகுகள்ளியும், சப்பாத்திக் கள்ளியும் நிறைந்திருக்கும். சங்கஞ் செடிகளை வெட்டக்கூடாது என்ற கட்டுப்பாடும் மீறியவர்களுக்கு தண்டனை என்ற நியதியும் இருந்து உள்ளது. இதுபோல பல விதங்களில் கண்மாய் நீரைப்பராமரித்தார்கள்.

வேளாண்மை முறைகள்

'வெற்றிலை' விவசாயத்தைப் பொறுத்தவரை ஆற்றுத்தண்ணீரும், கிணற்றுத் தண்ணீரும் கலந்து பாய்ச்சும் போது வெற்றிலையில் காரம் இருக்கும் மெல்லுவதற்கு மொர மொரப்பாக இருக்கும். இல்லையயனில் சப்புனு இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அகத்திக் குழையில் வெற்றிலை படர்ந்து வரும்போது சிறப்பாக இருக்கும். அதாவது வெயிலும் நிழலும் கலந்து இருத்தலே வெற்றிலைக்கேற்ற சூழல் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

தொகுப்புரை

* கண்மாய் நிறைசூலியாகவும் ஊர்மக்களைக் காக்கும் தெய்வமாகவும் கருதப்பட்டுள்ளது.
* நீர்ப்பாய்ச்சுதல் பற்றியும் விவசாய முறை பற்றிய செய்திகளும் பிற உயிர்களுக்கு உணவு அளித்தல் முறையிலும் மக்கள் சிறந்து விளங்கியுள்ளமை இந்நாவல் மூலம் உணரமுடிகிறது.
* நீர்ப்பாசன வசதியைப்பெருக்கினால் தான் நாடும் வீடும் வளமுடன் விளங்கும். நீர்ப் பாசன வசதியற்ற நாட்டிலோ வீட்டிலோ உற்பத்தி பெருக இயலாது என்ற உண்மை புலப்படுத்தப்பட்டுள்ளது.
* நமது காலத்து நிகழக்கூடிய நீர்நிலை அழிப்பு அவலத்தை தடுத்து நிறுத்த வேண்டிய செய்தி புலப்படுத்தப்பட்டுள்ளது. மழையை நம்பி வாழும் விவசாயம் நலிவுறக் காரணமே நீர்நிலை மராமத்து செய்யாமல் இருப்பதே என்னும் கடந்த காலத்தை பற்றிய புரிதலை மட்டுமின்றி நிகழ்காலத்தில் நாம் நீரைப்பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளையும் இந்நாவல் சுட்டிக்காட்டியுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. புறநானூறு, பாடல் எண் : 18 (28-29)
2. இனியவை நாற்பது, பாடல் - 23
3. நான்மணிக்கடிகை, பாடல் - 54
4. அகநானூறு, பாடல்-252
5. புறநானூறு, பாடல் -118
6. சூல் நாவல், பக் - 38
7. சூல் நாவல், பக் - 58
8. சூல் நாவல், பக் - 91

துணைபுரிந்த நூல்கள்

1. சூல், சோ. தர்மன், அடையாளம் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு-2016.
2. புறநானூறு (மூலமும் உரையும்), நியு செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, முதற்பதிப்பு-2004.
3. இனியவை நாற்பது,(மூலமும் உரையும்), சாரதா பதிப்பகம, முதற்பதிப்பு-2005.
4. அகநானூறு(மூலமும் உரையும்), நியு செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, முதற்பதிப்பு-2004.
5. நான்மணிக்கடிகை, மூலமும் பழைய உரையும், பதிப்பாசிரியர், வே.இரா. மாதவன், தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழகம், பதிப்பு-2001.